1. அகர வரிசையில் அமைந்துள்ளதைக் கண்டறிக

(A) மனத்துயர், முந்நீர், மீமிசை, மேடுபள்ளம்

(B) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம்

(C) மீமிசை, முந்நீர், மனத்துயர், மேடுபள்ளம்

(D) முந்நீர், மீமிசை, மேடுபள்ளம், மனத்துயர்

2. 'குடிதழீஇக் கோல் ஓச்சும்' – எவ்வகை அளபெடை?

(A) இன்னிசை அளபெடை

(B) செய்யுளிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை

(D) ஒற்றளபெடை

3. கருவி, கருத்தா – இவ்விரண்டை மட்டும் உணர்த்தும் வேற்றுமை

(A) இரண்டாம் வேற்றுமை

(B) மூன்றாம் வேற்றுமை

(C) நான்காம் வேற்றுமை

(D) ஆறாம் வேற்றுமை

4. திணைகளுக்குரிய ஊர்ப்பெயர்களைப் பொருத்துக.

(a) குறிஞ்சி 1. பாடி, சேரி

(b) முல்லை 2. பேரூர் மூதூர்

(c) மருதம் 3. பட்டினம், பாக்கம்

(d) நெய்தல் 4. சிறுகுடி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

5. பட்டியல் I-ஐ பட்டியல் II-இல் பொருத்தி கீழேகொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | கூழை | 1. | 1, 3, 4 சீர்களில் வரும் |
| (b) | மேற்கதுவாய் | 2. | 1, 2, 3, 4 சீர்களில் வரும் |
| (c) | கீழ்க்கதுவாய் | 3. | 1, 2, 3 சீர்களில் வரும் |
| (d) | முற்று | 4. | 1, 2, 4 சீர்களில் வரும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

6. DUBBING, DIRECTOR – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க?

(A) படப்பிடிப்பு, இயக்குநர்

(B) நகர்த்தும்வண்டி, தயாரிப்பாளர்

(C) ஒலிச்சேர்க்கை, இயக்குநர்

(D) படப்பிடிப்புக் கருவி, தயாரிப்பாளர்

7. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல்

(A) வளையல்

(B) ஐந்து

(C) திண்ணை

(D) ஏதுமில்லை

8. கூகை - உரிய மரபுச்சொல்லை எழுது

(A) கூவும்

(B) கத்தும்

(C) குழறும்

(D) அகவும்

9. 'Snacks' – என்ற ஆங்கில சொல்லிற்கு பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தேர்க

(A) சிற்றுண்டி

(B) சிற்றுணா

(C) சிற்றுணவு

(D) சீரான உணவு

10. மூன்றடிச் சிற்றெல்லையாய் பாடும் பா

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) கலிப்பா

(D) வஞ்சிப்பா

11. கீழ்வருவனவற்றுள் மரபுச் சொற்கள் இல்லாத தொடர் எது?

I. சிங்கம் முழங்கும்

II. பூனை கீச்சிடும்

III. புறா குனுகும்

IV. வண்டு முரலும்

(A) I மற்றும் II சரி

(B) III மற்றும் IV சரி

(C) I, III மற்றும் IV சரி

(D) II, III மற்றும் IV சரி

12. கலிங்கத்துப்பரணி பாடப்படும் பாவகை

(A) சிந்துவிருத்தம்

(B) கட்டளை கலித்துறை

(C) ஆசிரியவிருத்தம்

(D) கலித்தாழிசை

13. கணவனைத் தேடி அலைந்த சங்ககாலப் பெண்பாற் புலவர்

(A) காக்கைப்பாடினியார்

(B) காரைக்காலம்மையார்

(C) வெள்ளி வீதியார்

(D) நப்பசலையார்

14. உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக் கும்மே
– இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

(A) புறநானூறு

(B) அகநானூறு

(C) ஐங்குறுநூறு

(D) பரிபாடல்

15. "... சிறு புல் நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்" – என்ற
பாடலடியைப் பாடியவர்

(A) கபிலர்

(B) கம்பர்

(C) ஔவையார்

(D) பரணர்

16. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?

(A) 100

(B) 105

(C) 107

(D) 110

17. "வருகைப் பருவம்" – என்பது

(A) குழந்தையின் பத்தாம் திங்களில் நிகழ்வது

(B) குழந்தையின் பனிரண்டாம் திங்களில் நிகழ்வது

(C) குழந்தையின் இருபதாம் திங்களில் நிகழ்வது

(D) குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் நிகழ்வது

18. 'உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுதகிரணமே'

– என்று தொடங்கும் பாடல் எந்தப்பருவத்தில் இடம்பெற்றுள்ளது?

(A) செங்கீரைப்பருவம்

(B) முத்தம் பருவம்

(C) வருகைப்பருவம்

(D) அம்புலிப்பருவம்

19. உமறுப்புலவரின் காலம்

(A) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

(B) கி.பி. பதினேழாம் நூற்றாண்டு

(C) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு

(D) கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு

20. 'ஆபுத்திரன் நாடு அடைந்த காதை' மணிமேகலையில் ———————— காதையாக உள்ளன.

(A) இருபதாவது

(B) இருபத்து நான்காவது

(C) இருபத்தேழாவது

(D) இருபத்தொன்றாவது

21. சரியான பொருள் தருக.

'ஆயம்'

(A) செவிலியர் கூட்டம்

(B) பாணன் கூட்டம்

(C) தோழியர் கூட்டம்

(D) அனைத்தும்

22. தெய்வக் கவிஞர் என்றால் —————— என்று பொருள்படும்.

(A) திவ்வியகவி

(B) அழகியமணவாளதாசர்

(C) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

(D) குமரகுருபரர்

23. மூன்றாம் நந்திவர்மன் எந்நூலின் பாட்டுடைத் தலைவன்?

(A) உலா

(B) அந்தாதி

(C) கலம்பகம்

(D) பரணி

24. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(A) மேதி – எருமை

(B) கேசரி – சிங்கம்

(C) எண்கு – புலி

(D) மரை – மான்

25. பொருந்தாத தொடரைக் கண்டறிக.

(A) இழிந்த பிறப்பாய் விடும்

(B) பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்

(C) ஏதம் படுபாக் கறிந்து

(D) செல்வத்துப் பயனே ஈதல்

26. "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்" – எனக் கபிலரைப் புகழ்ந்தவர் யார்?

(A) நக்கீரர்

(B) இளங்கீரனார்

(C) பெருங்குன்றூர்க்கிழார்

(D) நப்பசலையார்

27. "வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"
– பாடியவர் யார்?

(A) கபிலர்

(B) பேயனார்

(C) ஓரம்போகியார்

(D) ஓதலாந்தையார்

28. —————— மன்னன் யானைக்கட்சேய் மாந்தரஞ் ஆவார்.

(A) சேர
(B) சோழ
(C) பாண்டிய
(D) பல்லவ

29. அகநானூற்றில் 6, 16 என்ற எண்களாக வரும் திணை

(A) பாலை
(B) குறிஞ்சி
(C) நெய்தல்
(D) மருதம்

30. நல்லந்துவனார் நெய்தல் கலியில் பாடியப் பாடல்கள்

(A) பதிமூன்று
(B) முப்பத்து மூன்று
(C) பதினொன்று
(D) நூறு

31. ‘ஆதிகவி’ என்று போற்றப்பட்டவர்

(A) கம்பர்

(B) வான்மீகி

(C) வியாசர்

(D) ஒட்டக்கூத்தர்

32. ‘தனயை’ என்பது யாரைக் குறிக்கும்?

(A) மருமகள்

(B) மகள்

(C) கொழுந்தி

(D) மாமியார்

33. ‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்’ கம்பரைப் புகழ்ந்து பாடியவர் யார்?

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) சுரதா

(D) வாணிதாசன்

34. பொருந்தாச் சொல்லைக் கண்டிறிக.

மரக்கலம்

(A) வங்கம்

(B) அம்பி

(C) திமில்

(D) புணரி

35. ‘அறவுரைக் கோவை’ என்றழைக்கப்படும் நூல்

(A) முதுமொழிக்காஞ்சி

(B) நான்மணிக்கடிகை

(C) பழமொழிநானூறு

(D) நாலடியார்

36. ரஷ்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர்

(A) வால்ட் விட்மன்

(B) லியோடால்ஸ்டாய்

(C) கலில் கிப்ரான்

(D) ஜான் பன்யன்

37. தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலை இயற்றியவர்

(A) வீரமாமுனிவர்

(B) பவனந்தி முனிவர்

(C) அகத்தியர்

(D) நச்சினார்க்கினியர்

38. 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழை வெளியிட்டவர் யார்?

(A) அயோத்திதாசப் பண்டிதர்

(B) திரு.வி.க

(C) அரும்பதஉரைகாரர்

(D) சானகிராமன்

39. உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை அதன் தொன்மை கருதி 'என்றுமுள தென்தமிழ்' எனக் கூறியவர்

(A) திருநாவுக்கரசர்

(B) தொல்காப்பியர்

(C) கம்பர்

(D) திருவள்ளுவர்

40. 'திரைக்கவித் திலகம்' எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்

(A) கண்ணதாசன்

(B) வாலி

(C) வைரமுத்து

(D) மருதகாசி

41. வானம்பாடி இயக்கம் தமிழ்நாட்டில் எங்கு செயல்பட்டது

(A) சென்னை

(B) மதுரை

(C) கோவை

(D) திருச்சி

42. பாவலரேறு என அழைக்கப்படுபவர்

(A) தேவநேயபாவாணர்

(B) பெருஞ்சித்திரனார்

(C) சுப்புரத்தினதாசன்

(D) வெ. இராமலிங்கனார்

43. 'சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப்புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக் கொல்லி மருந்தாக இருந்தவர்'

(A) அண்ணல் காந்தியடிகள்

(B) அம்பேத்கர்

(C) தந்தை பெரியார்

(D) பாரதியார்

44. இந்தியாவிலுள்ள காடுகளின் அளவைக் குறிக்க

(A) ஆறில் ஒரு பங்கு

(B) எட்டில் ஒரு பங்கு

(C) நான்கில் ஒரு பங்கு

(D) மூன்றில் ஒரு பங்கு

45. களிமண் பலகைகளில் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பு எங்கு கண்டெடுக்கப்பட்டது?

(A) ஆம்பூர்
(B) நிப்பூர்
(C) மேப்பூர்
(D) அரியலூர்

46. 'திராவிட' என்னும் சொல்லை முதன் முதலில் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர்

(A) கால்டுவெல்
(B) ஈ. வெ. ரா
(C) மறைமலையடிகள்
(D) ஈராஸ் பாதிரியார்

47. ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளர் ஆகி உலகியல் நடத்த வேண்டும் என பாடியவர்

(A) பெருந்தேவனார்
(B) பாரதியார்
(C) பாரதிதாசன்
(D) வள்ளலார்

48. கண்ணதாசன் பணியாற்றாத இதழ் பெயர்

(A) தென்றல்
(B) முல்லை
(C) குயில்
(D) தமிழ் மலர்

49. இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது எது?

(A) யாப்பருங்கலக் காரிகை
(B) தண்டியலங்காரம்
(C) தொல்காப்பியம்
(D) நன்னூல்

50. மாதாணுபங்கி என அழைக்கப்படுபவர் யார்?

(A) கம்பர்

(B) பாரதியார்

(C) வீரமாமுனிவர்

(D) திருவள்ளுவர்

51. ‘அடவிமலை யாறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு’ —
அடிக்கோடிட்ட சொற்களுக்கு பொருத்தமான இலக்கணக் குறிப்பைக் கண்டறிதல்.

(A) உவமைத்தொகை, உரிச்சொற்றொடர்

(B) உம்மைத்தொகை, உருவகம்

(C) அடுக்குத்தொடர், வினைத்தொகை

(D) உம்மைத்தொகை, உரிச்சொற்றொடர்

52. இளமைப் பெயர்களைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மான் | 1. | குருளை |
| (b) | கீரி | 2. | குஞ்சு |
| (c) | கோழி | 3. | கன்று |
| (d) | சிங்கம் | 4. | பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

53. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?

(A) கண்ணன் காலையில் நாஷ்டா சாப்பிட்டான்

(B) அலுவலகத்தில் அனுமதி பெற்று உள்ளே வர வேண்டும்

(C) கோவிலில் தெய்வத்திற்கு வழிபாடு நடந்தது

(D) பெரியவர்களிடம் மணமக்கள் ஆசிர்வாதம் பெற்றனர்

54. சரியான இலக்கணக் குறிப்பைப் பொருத்துக.

(a) மடக்கொடி — 1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(b) தேரா மன்னா — 2. பண்புத்தொகை

(c) செங்கோலன் — 3. வினைத்தொகை

(d) செய்கொல்லன் — 4. அன்மொழித்தொகை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

55. பட்டியல் I உடன் பட்டியல் II-ஐப் பொருத்தி, கீழ்க்கண்ட தொகுப்பிலிருந்து உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| (a) தெலுங்கு | 1. | வட மொழி |
| (b) தமிழ் | 2. | வடதிராவிட மொழி |
| (c) மால்தோ | 3. | தென்திராவிட மொழி |
| (d) சமஸ்கிருதம் | 4. | நடுதிராவிட மொழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

56. கீழ்க்கொடுக்கப்பட்டவற்றுள் இயல்பு புணர்ச்சி சொல்லைத் தேர்க

(A) வாழைப்பழம்

(B) பொற்குடம்

(C) பாசிலை

(D) பொன்வளையல்

57. 'ஆடுவாயா' என்ற வினாவிற்குப் 'பாடுவேன்' என்று விடையளித்தல்

(A) நேர் விடை

(B) இனமொழி விடை

(C) உற்றது உரைத்தல் விடை

(D) உறுவது கூறல் விடை

58. 'கார் அறுத்தான்' – எவ்வகை ஆகுபெயரைச் சார்ந்தது?

(A) சினையாகுப்பெயர்

(B) தொழிலாகுப்பெயர்

(C) பண்பாகுப்பெயர்

(D) காலவாகுப்பெயர்

59. பொருளறிந்து பொருத்துக.

(a) அரசன் வந்தது — 1. பால் வழு

(b) கபிலன் பேசினாள் — 2. எண் வழு

(c) குயில்கள் கூவியது — 3. இட வழு

(d) கமலா சிரித்தாய் — 4. திணை வழு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 4 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

60. கீழ்வரும் சொற்றொடர்களில் உரிச்சொற்றொடரை எழுதுக

(A) விரிகடல்

(B) கடிமுரசு

(C) முகத்தாமரை

(D) கரகமலம்

61. ஐந்தடிமுதல் பன்னிரெண்டடி வரை வரும் பா

(A) குறள் வெண்பா

(B) சிந்தியல் வெண்பா

(C) இன்னிசை வெண்பா

(D) பஃறொடை வெண்பா

62. ஒருதலைக் காமம் என்பது

(A) அன்பின் ஐந்திணை

(B) பாடாண் திணை

(C) கைக்கிளை

(D) பெருந்திணை

63. கீழ்வருவனவற்றுள் காலவாகு பெயரைக் கண்டறிக

(A) திசம்பர்ப் பூ பூத்தது

(B) இந்தியா வென்றது

(C) வெள்ளை அடித்தான்

(D) பொங்கல் உண்டான்

64. உமறுப்புலவர் யாருடைய வேண்டுகோளின்படி சீறாப்புராணத்தை எழுதத் தொடங்கினார்?

(A) அப்துல் காதிர் மரைக்காயர்

(B) அபுல் காசிம்

(C) காதிர் முகைதீன்

(D) கடிகை முத்துப் புலவர்

65. 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம் பாடி இறந்த பிள்ளையை எழுப்பியவர்?

(A) ஞான சம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

66. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் எனத் திரு.வி.க கூறுவது

(A) கம்பராமாயணம்

(B) சிலப்பதிகாரம்

(C) பெரியபுராணம்

(D) மகாபாரதம்

67. மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை – இவ்வடி இடம் பெற்ற நூல்

(A) பரிபாடல்

(B) நற்றிணை

(C) மதுரைக்காஞ்சி

(D) நெடுநல்வாடை

68. ‘காயும் வில்லினன், கல்திறள் தோளினன்’ – எனப் போற்றப்படுபவன்

(A) இராமன்
(B) அர்ச்சுனன்
(C) குகன்
(D) கர்ணன்

69. ‘மணநூல்’ எனப் புகழப்பெற்றது

(A) சிலப்பதிகாரம்
(B) சீவக சிந்தாமணி
(C) கம்பராமாயணம்
(D) குண்டலகேசி

70. மதுரை மீனாட்சியம்மையிடம் முத்துமணி மாலையை பரிசாக வாங்கியவர் – யார்?

(A) பரஞ்சோதி முனிவர்
(B) குமரகுருபரர்
(C) நக்கீரர்
(D) சீத்தலைச் சாத்தனார்

71. பத்துப்பாட்டில் பாண்டிய நெடுஞ்செழியனை தலைவனாக கொண்டு பாடப்பட்ட நூல் எது

(A) திருமுருகாற்றுபடை – மதுரைகாஞ்சி
(B) மலைபடுகடாம் – பட்டினப்பாலை
(C) நெடுநெல்வாடை – மதுரைகாஞ்சி
(D) முல்லைப்பாட்டு – குறிஞ்சிப்பாட்டு

72. பொருந்தாத தொடரைக் குறிப்பிடுக

(A) உலா – ஐந்துவகைப் பருவம்

(B) கலம்பகம் – பதினெட்டு உறுப்புகள்

(C) பிள்ளைத்தமிழ் – பத்துப் பருவங்கள்

(D) பரணி – ஐநூற்றி ஒன்பது தாழிசைகளைக் கொண்டது

73. எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை தமிழாசிரியராக எவ்வூரில் பணியாற்றினார்?

(A) தூத்துக்குடி

(B) சாயாபுரம்

(C) திருநெல்வேலி

(D) நாகலாபுரம்

74. மடப்பிடி யார்?

(A) சீதை

(B) பாஞ்சாலி

(C) மாதவி

(D) கண்ணகி

75. பொருள் தருக.

சதுரங்கச்சேனை

(A) யானைப் படை

(B) குதிரைப் படை

(C) தேர்ப் படை

(D) நால்வகைப் படை

76. ‘பெருமாள் திருமொழி’, ‘முகுந்தமாலை’ – இந்நூல்கள் எழுதப்பட்ட மொழி

(A) தமிழ், வடமொழி

(B) வடமொழி, ஆங்கிலம்

(C) இலத்தீன், கிரீக்கு

(D) தமிழ், இலத்தீன்

77. அப்பூதியடிகள் பிறந்தவூர்

(A) திருவழுந்தூர்

(B) திருவாதவூர்

(C) திங்களூர்

(D) திருநாவலூர்

78. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக. ‘அடிகள் நீரே அருளுக’ என்றவர் யார்?

(A) சீத்தலைச் சாத்தனார்

(B) இளங்கோவடிகள்

(C) திருத்தக்கத் தேவர்

(D) நாதக்குத்தனார்

79. ‘சூலை’ என்பது

(A) கண் நோய்

(B) வயிற்று நோய்

(C) இதய நோய்

(D) கழுத்து நோய்

80. துள்ளல் ஓசையைக் கொண்ட நூல் எது?

(A) பரிபாடல்
(B) கலித்தொகை
(C) நற்றிணை
(D) குறுந்தொகை

81. ஜி.யு.போப் அவர்களுக்கு தமிழ்மீது பற்று உண்டாவதற்குக் காரணமாக இருந்த நூல் எது?

(A) அகநானூறு
(B) புறநானூறு
(C) ஐங்குறுநூறு
(D) பரிபாடல்

82. 'சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே' இவ்வடிகள்
- இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) நற்றிணை
(B) குறுந்தொகை
(C) புறநானூறு
(D) அகநானூறு

83. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அரி | 1. | பனையோலைப்பெட்டி |
| (b) | செறு | 2. | புதுவருவாய் |
| (c) | யாணர் | 3. | வயல் |
| (d) | வட்டி | 4. | நெற்கதிர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

84. கம்பராமாயணம் ———————— நூல்.

(A) முதல்நூல்
(B) நாடகநூல்
(C) வழிநூல்
(D) மொழிபெயர்ப்புநூல்

85. "குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று" இடம்பெற்றுள்ள நூல் எது?

(A) நாலடியார்
(B) ஏலாதி
(C) திரிகடுகம்
(D) முதுமொழிக்காஞ்சி

86. 'கல்லார் அறிவிலாதார்' என்று கூறும் நூல்

(A) நாலடியார்
(B) திருக்குறள்
(C) இன்னாநாற்பது
(D) ஏலாதி

87. ———————— என்ப உளவோ கருவியாற் காலம் அறிந்து செயின்.

(A) அருவினை
(B) நல்வினை
(C) தீவினை
(D) தன்வினை

88. ஏலாதி ———————— வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

(A) எழுபத்தொரு
(B) எண்பத்தொரு
(C) ஐம்பத்தொரு
(D) முப்பத்தொரு

89. "கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை" இடம்பெற்றுள்ள் நூல்

(A) திரிகடுகம்
(B) நாலடியார்
(C) நான்மணிக்கடிகை
(D) சிறுபஞ்சமூலம்

90. குருதிக் கொடை தருபவர்களுக்கு, அக்குருதி மீண்டும் ———————— நாட்களுக்குள் உடலில் சுரந்துவிடும்.

(A) 30 நாட்கள்
(B) 25 நாட்கள்
(C) 3 மாதங்கள்
(D) 21 நாட்கள்

91. சாகித்திய அகாதமி பரிசு பெற்ற கண்ணதாசன் புதினம்

(A) ஆட்டனந்தி ஆதிமந்தி
(B) மாங்கனி
(C) சேரமான் காதலி
(D) அங்கயற்கண்ணி

92. கீழ்க்காண்பவற்றுள் கம்பர் எழுதாத நூல் எது?

(A) சடகோபரந்தாதி
(B) சரஸ்வதி அந்தாதி
(C) திருக்கை வழக்கம்
(D) தொன்னூல் விளக்கம்

93. பாரதியார் வசன கவிதை எழுத உந்துதலாய் இருந்த அமெரிக்கக் கவிஞர்

(A) வால்ட் விட்மன்
(B) வேர்ட்ஸ்வொர்த்
(C) கீட்ஸ்
(D) ஷேக்ஸ்பியர்

94. தமிழர்களின் தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்று

(A) சிலம்பாட்டம்
(B) ஒயிலாட்டம்
(C) ஏறுதழுவுதல்
(D) கபடி ஆட்டம்

95. 'முக்கூடற்பள்ளு' எந்த மாவட்டத்தின் பேச்சு வழக்கைக் கொண்டுள்ளது?

(A) தஞ்சாவூர்
(B) மதுரை
(C) ஈரோடு
(D) திருநெல்வேலி

96. 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' என்னும் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

(A) பழமொழி
(B) திருக்குறள்
(C) தேவாரம்
(D) திருவாசகம்

97. "திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது" என்று கூறியவர்

(A) கி.ஆ.பெ. விசுவநாதம்

(B) இ.ரா. கிருஷ்ணமூர்த்தி

(C) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

(D) பரிமேலழகர்

98. 'வீரமாமுனிவரைப் போல் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர்'

(A) பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

(B) பாண்டித்துரைத் தேவர்

(C) அயோத்திதாச பண்டிதர்

(D) பேரறிஞர் அண்ணா

99. எள்செடியின் விதையில் இருந்து நெய் கண்டுபிடித்த திருநாளே இத்திருநாள்

(A) கார்த்திகை தீபத் திருநாள்

(B) தமிழர் திருநாள்

(C) விசாகத் திருநாள்

(D) தீபாவளி

100. 'சித்திரக்காரப் புலி' என அழைக்கப்படுபவர்

(A) நரசிம்மவர்ம பல்லவன்

(B) முதலாம் மகேந்திரவர்ம பல்லவன்

(C) இரண்டாம் குலோத்துங்கன்

(D) இராசராச சோழன்